**சோழர் சாம்ராஜ்யம்**
**9 முதல் 12ஆம் நூற்றாண்டு வரையான வெண்கலங்கள்**

மிக உன்னதமான கலைப் படைப்புகளுள் சோழர் பேரரசு காலத்தில் தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்ட கோயில் வெண்கலச் சிற்பங்களும் அடங்கும். இந்து வழிபாட்டின் முக்கியக் கோட்பாடுகளுள் ஒன்றான தர்ஷனின் நோக்கம் கடவுளைப் பார்ப்பதும், கடவுளால் பார்க்கப்படுவதும் ஆகும். ஆரம்பத்தில் அத்தகையத் தொடர்பு கோயிலின் சன்னதியில் மட்டுமே நடைபெற்றது. ஆனால் வாழ்க்கையில் கீழ்நிலையில் இருந்தவர்கள் அதற்குள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. 6ஆம் நூற்றாண்டுவாக்கில் தென்னிந்தியாவில் ஒரு புதிய கருத்து தலையெடுத்தது. அதன்படி, அனைவரும் பார்க்கும் வண்ணம் திருவிழாக்களின்போது தெய்வச் சிலைகள் கோயில்களுக்கு வெளியே ஊர்வலமாக கொண்டுவரப்பட்டன. இந்த புதிய வழக்கத்தால் எளிதில் தூக்கக்கூடிய மற்றும் மிக நுனுக்கமான வேலைபாடுகளுடன் அமைக்கப்பட்ட வெண்கலச் சிலைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

**இந்துக் கோயில் சிற்பங்கள்**

இந்துக்கோயில், சமயப்பற்றுள்ளவர்களை தெய்வங்களோடு ஒன்றிணைக்கிறது. தெய்வங்களின் தற்காலிக இருப்பிடமே கோயில். அங்கு நிகழும் பூசைகளும் சடங்குகளும் தெய்வத்தை அங்கு வரவழைக்கும். கோயிலுக்குள் இருக்கும் உருவங்களை நினைத்துக்கொண்டே கோயிலைச் வலம் வருவது ஒரு முக்கியமான சடங்கு. கோயில் சிற்பங்கள் வாஸ்து சாஸ்திரப்படி வடிவமைக்கப்பட்டு கோயிலில் வைக்கப்பட்டன.

கோயிலின் அலங்காரங்கள் அங்கு வீற்றிருக்கும் மூலக்கடவுளின் நன்மைகளை உணர்த்தும். உதாரணத்திற்கு, பூமியின் வளத்தை பிரதிபலிக்கும் பல உருவங்கள், உயிரினங்களை உருவாக்கும் கடவுளின் ஆற்றலை உணர்த்துக்கின்றன. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குள் இந்து கோயில்கள் மிக பெரிய மாற்றங்களை கண்டுவிட்டன. எளிமையான, ஒரு அறை கொண்ட கட்டடங்கள், ஒரு விரிவான கட்டடமாக பிரம்மாண்டமான மண்டபங்களுடனும், உயர்ந்த கட்டடங்களுடனும் உருமாற்றம் கண்டன.

**சமண மதம்**

இந்தியாவிலிருந்து தோன்றிய மூன்று முக்கிய மதங்களுல் சமண மதமும் ஒன்று. ஆனால் இந்து மதம் பௌத்த மதங்களைப் போலல்லாமல் சமண மதம் இந்தியாவிற்கு வெளியில் பரவவில்லை. அந்த மதம் குறைந்தது கிமு 6ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகிறது. பிராமண வேதங்களையும், ஜாதி முறைகளையும் எதிர்த்தும் விலங்குகளைப் பலி கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தாலும் தோன்றியதுதான் சமண மதம். இந்து மதத்திலும் பௌத்த மதத்திலும் உள்ளது போலவே ஒவ்வொரு சமண மதத்தை பின்பற்றுவோரின் குறிக்கோளும் மறுபிறப்பிலிருந்து விடுபட வேண்டும் என்பதே. ஆசைகளைத் துறப்பதாலும், மிக எளிமையான வாழ்க்கை வாழ்வதினாலும் உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிக்காமலும் ஒருவர் மோட்ச்ச நிலை அடையளாம். சமண மதம் வளர வளர இந்து வேதங்களில் உள்ள தெய்வங்கள் அதில் சேர்க்கப்பட்டன.

சமண மதத்தில் 24 ஜினாக்கள் வணங்கப்படுகின்றனர். இவர்கள் மோட்ச்ச நிலையை அடைந்தவர்கள். ஜினா என்றால் 'விடுவிப்பவர்' அல்லது 'கைப்பற்றுபவர்' என்று பொருள் உடலிலிருந்து ஆன்மாவை விடுவிக்க அவர்கள் அனைத்து உயிரினங்களுக்கும் உதவுகின்றனர். இவர்களை “ஆற்றைக் கடப்பவர்கள்” அல்லது “ஃபோர்டர்ஸ்” (திர்தங்கராஸ்) என்றும் அழைக்கப்பட்டனர். அவர்கள் மறுபிறப்பிலிருந்து விடுபட்டதே அதற்குக் காரணம்.

**டன்டரா சிந்தனை**

டன்ட்ரா என்பது சடங்குகளும் சம்பிரதாயங்களும் அடங்கிய ஒரு மர்மமான குறியீடு. மாயாஜால மந்திர தந்திரங்களாலும், கணித வரைபடங்களாலும் அந்தச் சடங்குகள் இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றுடன் தொடர்பு கொள்ள உதவும். டன்ட்ரா சிந்தனையைப் பின்பற்றுபவர்கள் ஆன்மீக இலக்குகளை அடைய, பிரபஞ்சத்தில் இருந்து பாயும் சக்தியையும் தங்கள் உடல்களிலிருந்து பாயும் சக்தியையும் குறியாக வைத்து தியானம் செய்வார்கள். அதுபோன்ற தியான முறைகள் உயர் விழிப்புநிலையை உருவாக்கும். ஒருவரின் உடல் பிரபஞ்சத்தின் ஒரு அனுவாக கருதப்படுகிறது. மேலும் பிரபஞ்சத்தின் புத்தாக்கச் சக்தி ஒன்றாக மனித பாலியல் சக்தியும் அடையாளம் காணப்படுகிறது.

டான்டரா சிந்தனை, இந்து, மற்றும் பௌத்த மதங்கள் தோன்றும் முன்பே பின்பற்றப்பட்டது. அதன் சில கூறுகளை வெவ்வேறு வழிகளில் அந்த இரண்டு மதங்களும் தத்தெடுத்துக்கொண்டன. சடங்குகளும் கடுமையான தியானப் பயிற்சிகளும் முறையாகப் பின்பற்றப்பட்டால் ஒருவர் ஒரு வாழ்நாளில் ஞானம் பெற்று விடலாம். அந்த எளிதில் புரிந்துக்கொள்ள முடியாத கருத்துக்களை எடுத்துக்கூறும் வகையில் டான்டரா ஓவியங்களிலும் சிற்பங்களிலும் சிக்கலான உருவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**இஸ்லாமியக் கலை, 7 முதல் 20ஆம் நூற்றாண்டு வரை**

'இஸ்லாமியக்கலை' என்பது ஒரு புதியச் சொல் முஸ்லிம்கள் வாழும் சமூகங்களுக்காக, அல்லது சமூகங்களால் தயாரிக்கப்படும் கலை வேலைப்பாடுகள்தான் ‘இஸ்லாமியக் கலை’ என்று அழைக்கப்படுகின்றன. வட ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் தென்கிழக்காசியாவின் பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதிகளே “இஸ்லாமிய உலகம்” என்றழைக்கப்படுகின்றன. நபிகள் நாயகத்தின் (சுமார் 570–632) காலத்திலிருந்து இஸ்லாமிய சமூகங்களின் பயன்பாட்டுக்காக தனித்தன்மைவாய்ந்த பொருள்கள் உருவாக்கப்பட்டன.

இந்த பரந்த நிலப்பரப்பும், நீண்ட கால சரித்திரமும் பல விதமான கலைகளுக்கு வழிவிட்டன. இதனால் இஸ்லாமியக் கலைக்கு ஒருமித்த பாணி கிடையாது. மேலும் அதனைச் செய்தவர்களின் மதத்தாலும் அவற்றை அடையாளம் காண முடியாது. ஏனெனில், அவர்கள் முஸ்லிம்களாக இருந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆனாலும் இக்கலைப்பொருள்களுக்கிடையே பொதுவான அம்சங்களையும், தன்மைகளையும் காணலாம். உருவாக்கியவர் ஒரு கடவுள்தான், அவரைப் பிரதிபலிக்க முடியாது என்ற “ஒருவனே கடவுள்” (தவ்ஹிட்) கொள்கையால், உருவங்கள் அடங்கிய ஓவியத்தைவிட உருவமற்ற சின்னங்களே அதிகம் விரும்பப்பட்டன. மேலும் ஒரே வடிவத்தைப் பல்வேறு கலைப்பொருட்களில் பயன்படுத்துவது, பொருள்களில் நுணுக்கமான வேலைபாடுகள் சேர்க்கப்படுவது போன்றவை மற்ற அம்சங்கள்.

இஸ்லாமிய உலகின் பல்வேறு கலைகள், சமய நெறிகளாலும் பொருட்களாலும் இணைக்கப்படுகின்றன. குறிப்பாக, பள்ளிவாசல்களில் பின்பற்றப்படும் சமய பழக்க வழக்கங்கள், குரான், நூல் வைத்து வாசிக்கும் சிறு மேசைகள், பள்ளிவாசல்களின் பிரசங்க மேடைகள், விளக்குகள், கட்டட அலங்காரம் போன்றவை இதில் அடங்கும்.

**இஸ்லாமியக் கட்டடக் கலை**

கல், மரம், பிளாஸ்ட்டர், மெருகு பூசப்பட்ட கற்கள் போன்றவற்றில் காணப்படும் அலங்காரங்கள் இஸ்லாமிய உலகின் கட்டடக் கலையைப் பிரதிநிதிக்கின்றன. கணித வடிவங்கள், கையெழுத்துக் கலை, இயற்கைச் செடி வகைகள் போன்றவற்றை கலைஞர்கள் விரும்பினர். இஸ்லாமியக் கலைஞர்கள், இந்த வடிவங்களை, சம அளவில் மீண்டும் மீண்டும் பயன்படுத்தி, எவ்வளவு பெரிய பரப்பளவையும் நிரப்பக்கூடிய ஆற்றலைக் பெற்றவர்கள். சுற்றுப்புறங்களிலிருந்து தனித்து நிற்க வேண்டும் என்பதற்காக அதிக வண்ணங்கள் பயன்படுத்தப்பட்டன. உதாரணத்திற்கு, முல்ட்டானின் (மத்திய பாகிஸ்தான்) கல்லறை நினைவுச் சின்னங்களில் பிரகாசமான நீலப் பளிங்குக் கற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பாலைவனம் போன்ற நிலப்பரப்பு உண்டு.